# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசிலர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, நவெம்பர் மாதம் 14 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

விலை : ரூபா 51.50 தபாற் செலவு : ரூபா 13.50

## 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க. உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2003 நவெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச. வ.— ஓ. 19/2002
4750

## 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க. உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம். 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க. உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க. உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு. "இச்சட்டத்திற்கான முதலாம். இரண்டாம். மூன்றாம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக. "இச்சட்டத்திற்கான முதலாம். இரண்டாம். மூன்றாம். நான்காம். ஐந்தாம். ஆறாம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

*2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு. அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் "கவனத்தில் கொள்ளப்படுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக. "கவனத்தில் கொள்ளப்படுதலாகாது :" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :

(2) அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(உ) கட்டணமின்றி அல்லது நேரடியாகவாயினும் சரி பங்கு விருப்பத் தெரிவுத் திட்டமொன்றினூடாக வாயினுஞ்சரி, கம்பெனியொன்றின் ஏதேனும் பங்கின் நிலவுகின்ற சந்தைப் பெறுமதியிலும் பார்க்கக் குறைவானதாகவுள்ள ஒரு விலையில் தொழில்தரு நரிடமிருந்து அல்லது தொழில் தருநரின் சார்பில் ஒரு நன்மையாகப் பெறப்படும் கம்பெனியொன்றின் அத்தகைய பங்கு, கையளிக்கப்படும் நேரத்தில் அதன் பெறுமதி":

"அத்தகைய பங்கைக் கையளிக்கும் நேரத்திலான பெறுமதி" என்பது, பங்கைக் கொள்ளுவதற்கான ஆகுசெலவுக்கு மேலான மேன்மிகையாதல் வேண்டும்: அத்துடன்

(i) ஒரு விற்பனையின் விடயத்தில், விற்பனைத் தேதியன்றுள்ளவாறாக அத்தகைய பங்கின் விற்பனை விலை அல்லது சந்தைப்பெறுமதி, இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ, அது ;

(ii) விற்பனை என்ற வகையில்லாது வேறுவகை யாகக் கையளிக்கும் விடயத்தில் ; கையளிப்புத் தேதியன்றுள்ளவாறாக அத்தகைய பங்கின் சந்தைப் பெறுமதி ;

(iii) அத்தகைய பங்கை விற்பனை செய்யாமல் அல்லது கையளிக்காமல், அத்தகைய தொழில் தருநரின் ஊழியத்தில் உள்ள ஊழியரொருவர் இல்லாதொழிகின்ற விடயத்தில், அத்தகைய தொழில்தருநருடன் அவர் ஊழியத்திலிருந்த கடைசித் தேதியன்றுள்ளவாறான சந்தைப் பெறுமதி அத்தேதி, அத்தகைய பங்கினைக் கையளிந்த தேதியாகக் கருதப்படுதல் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய தொழில் தருநரின் கீழ் ஊழியத்திலிருக்கும் காலப்பகுதியின் போது அத்தகைய ஊழியர் இறக்கும் பட்சத்தில், அத்தகைய பங்கின் பெறுமதி பூஜ்யமாதலும் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க எழுகின்ற ஊழியத்திலிருந்தான இலாபங்கள் vii ஆம் அத்தியாயத்தின் கருத்துக்குட்பட்ட அந்த மதிப்பீட்டாண்டுக்கான தனியானதொரு வரிமதிப்பீட்டிற்குரிய வருமானமாக இருக்கின்றன என்ற அடிப்படையில், அத்தகைய விற்பனை, கையளிப்பு அல்லது ஊழியத்திலிருந்து இல்லாதொழிதல் எந்த வரிமதிப்பீட்டாண்டில் நடைபெற்றதோ, அந்த வரிமதிப்பீட்டாண்டில் அவற்றின் மீது வருமானவரி விதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரியானது, இச்சட்டத்தின் xiv ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அறவிடப்படுதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பங்கைக் கையளிப்பதற்குத் தொழில்தருநர் காரணகர்த்தாவாக விராதவிடத்து, அத்தகைய ஊழியர், இச்சட்டத்தின் xiii ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஊழியத்திலிருந்தான அத்தகைய இலாபத்தின் மீது வருமதியாகவுள்ள வரியைச் செலுத்துதல் வேண்டும்.

**4.** இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் இலாபங்களும் வருமானமும், அதாவது, அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் எழுபத்தைந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் கூறுநம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்குமுன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான இலாபங்களினதும் வருமானத்தினதும் எழுபது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** இரண்டாயிரத்து ஓராம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2003 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் "ஊழியம் தவிர்ந்த வேறு எல்லா மூலங்களிலுமிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2003 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஊதியம் தவிர்ந்த வேறு எல்லா மூலங்களிலுமிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "21 ஆம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "21 ஆ, 21இ, 21ஈ, 21உ, 21ஊ, 21எ அல்லது 21ஏ" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், "ஏதேனும் பங்கிலாபம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பங்கிலாபம் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஐ) ஒரு கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் வரிமதிப்பிடற்பாலதான இலாபங்களிலிருந்து, 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், அத்தகைய கூறு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் பங்குதாரரொருவருக்குச் செலுத்தப்படும் ஏதேனும் பங்கிலாபம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஒரு வீட்டின் சொந்தக்காரருக்குத் திரளுகின்ற வருமானம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2003 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் வீட்டின் சொந்தக்காரருக்குத் திரளுகின்ற வருமானம்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் :

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நிர்மாணிக்கப்படும் ஏதேனும் வீட்டின் எவரேனும் சொந்தக்காரருக்குத் திரளுகின்ற வருமானம், அத்தகைய வீடு வதிவிட நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டால் அத்தகைய வீட்டின் நிர்மாணம் எந்த வரிமதிப் பீட்டாண்டில் பூர்த்தி செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கும், அவ்வரிமதிப்பீட் டாண்டை உடனடுத்து வரும் நான்கு வரிமதிப் பீட்டாண்டுகளுக்கும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8.** இரண்டாயிரத்து ஓராம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (அஅ) என்னும் பந்தியில், "2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்று தொடங்கும் சொற்களிலிருந்து "பங்காண்மையால் ஈட்டப்பட்ட" என்பது, வரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் :—

"ஏதேனும் வியாபாரத்தை, வர்த்தகத்தை, உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற வதிவுள்ள கம்பெனியால் அல்லது பங்குடைமையால்,

(i) 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் (நிர்மாணக்

கருத்திட்டம் தொடர்பிலான சேவைகள் உட்பட) அக்கம்பெனியினால் அல்லது பங்குடைமையினால் இலங்கைக்கு வெளியே ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பில் ;

(ii) 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது தயாரிக்கப்படும் எவையேனும் பண்டங்கள் சம்பந்தப்படாத அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பண்டங்கள் சம்பந்தப்படாத, ஏதேனும் கரைகடந்த வியாபாரம் தொடர்பில்,

அத்தகைய வியாபாரத்தை, தொழிலை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்துகையில் அல்லது பிரயோகிக்கையில் அக்கம்பெனியால் அல்லது பங்குடைமையால் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவில் (ஈ) என்னும் பந்தியில் "ஒரு வெகுமதியாகப் பெற்றுக்கொண்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2003, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஒரு வெகுமதியாகப் பெற்றுக்கொண்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கம்பெனியொன்று தொடர்பாகக் "குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி" என்பது,—

(அ) 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியால் கொண்டு நடாத்தப்படுவதும், அல்லது இருநூற்றைம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத முதலீட்டுடன் 2002,

ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கப்பட்ட ஒரு புதிய பொறுப்பு முயற்சியாக 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனியாக கொண்டு நடாத்தப்படுவதும், கமத்தொழில் உணவு பதனிடுதல், கைத்தொழில் மற்றும் இயந்திரக் கருவி தயாரிப்பு, இலத்திரனியல், பாரம்பரியமற்ற பண்டங்களை ஏற்றுமதி செய்தல் அல்லது தகவல் தொழிநுட்பமும் அதனையொத்த சேவைகளும் என்பனவற்றில் ஈடுபட்டுள்ளதுமான ஒரு பொறுப்பு முயற்சி என்று பொருளாகும் ;

(ஆ) (i) 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியினால் கொண்டு நடாத்தப்படுவதும், அல்லது இருநூற்றைம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத முதலீட்டுடன் 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கப்பட்ட ஒரு புதிய பொறுப்பு முயற்சியாக 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனியினால் கொண்டு நடாத்தப்படுவதுமான ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட கருத்திட்டமாகவும் ; அல்லது

(ii) இருநூற்றைம்பது மில்லியன் ரூபாவிலும் அதிகமாயுள்ள முதலீட்டைக் கொண்டதும்,

விதித்துரைக்கப்பட்ட வழிகாட்டிகளுடன் இணங்கியொழுகுவதுமான ஒரு பொறுப்பு முயற்சி என்று பொருளாகும்.

ஆயின், எவ்வாறாயினும், (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உப பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டுத்தொகை, ஏதேனும் ஏற்றுமதி உற்பத்திக் கிராமக் கம்பெனிக்கு ஏற்புடையதாகலாகாது.".

ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்தான வருமானத்துடன் சேர்த்து

வேறேதேனும் வர்த்தகத்திலிருந்து அல்லது வியாபாரத்திலிருந்து வருமானத்தைப் பெறுகின்ற ஒரு கம்பெனியின் விடயத்தில் இச்சட்டத்தின் கீழான விலக்களிப்பானது, இயைபான குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்தான இலாபங்களும் வருமானங்களும் தொடர்பில் மட்டுமே ஏற்புடையதாதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக —

(i) "காற்தொழில்" என்பது, ஏதேனும் விவரணத்திலைவான தாவரங்களைக் கொண்டு காணியில் பயிர் செய்வதும் மீன் வளர்ப்பதும் என்று பொருளாகும் ;

(ii) "பாரம்பரியமற்ற பண்டங்களின் ஏற்றுமதி" என்பது, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தகைய பொறுப்பு முயற்சியின் மொத்த விற்பனை வரவின் ஐம்பது சதவீதத்தைக் குறையாமலிருப்பனவையும், 49 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட்ட அத்தகைய பண்டங்களின் கருதப்பட்ட ஏற்றுமதியுட்பட, 52 ஆம் பிரிவில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறானவையுமான எவையேனும் பண்டங்களின் ஏற்றுமதி என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஏ மற்றும் 21ஐ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஏ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 21எ மற்றும் 21ஐ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஏதேனும் முயற்சி முதலீட்டுக் கம்பெனியை வருமான வரியிலிருந்து விலக்களித்தல்.

21ஏ. 23 ஆம் பிரிவின் (7) ஆம், உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான இலாபங்களும் வருமானமும் தவிர) 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும், அக்கம்பெனி குறித்த முதலீடொன்றாக அடையாளங்காணப்படவேண்டிய, (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான பணத் தொகையொன்றை கீழ் குறிப்பிடப்பட்டவற்றில், ஈடு

பட்டுள்ள கம்பெனியொன்றின் சாதாரண பங்குகளின் கொள்வனவுக்காக முதலீடு செய்தும் உள்ளவிடத்து (இம்முதலீடு குறித்த முதலீடாதல் வேண்டும்) அக்கம்பெனியானது எந்த வரிமதிப்பீட்டாண்டில் வணிகத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தொடங்குகின்றதோ, அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து தொடங்குகின்ற ஐந்தாண்டு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :—

(i) முன்னோடித்தன்மையினதானதும், அதன் தொழிற்பாடு, பெறுமதி சேர்க்கையையும் பொருளாதார அபிவிருத்தியின் மேம்படுத்துகையையும் விளைவிக்கின்றதுமான ஒரு கருத்திட்டம் ;

(ii) தகவல் தொழினுட்பவியல், வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு கருத்திட்டம் ;

(iii) பிரிவு 21உ என்பதன் கருத்துக்குட்பட்ட செயல்நிறைவேற்றமற்ற அல்லது குறைந்த செயல் நிறைவேற்றமுடைய கைத்தொழில்களை மறுசீரமைப்பதுடன் சம்பந்தப்பட்ட ஒரு கருத்திட்டம் ; அல்லது

(iv) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான வேறேதேனும் கருத்திட்டம்.

அத்துடன் அத்தகைய கம்பெனிக்குப் புதிய வியாபாரத்தின் தொடக்க மூலதனத்திலிருந்து அல்லது தொடக்க அல்லது ஆரம்பக்கட்ட நிதியத்திலிருந்து நிதியளிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும் —

(அ) முயற்சி மூலதனக் கம்பெனி 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் வணிகத் தொழிற்பாடுகளைத் தொடங்கியிருத்தலாகாது ; அத்துடன்

(ஆ) குறித்த முதலீடு, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட, முதலாவது முதலீட்டைச் செய்யும் நேரத்தில் ஓர் இணைக்கப்பட்ட கம்பெனியாகவுள்ள கம்பெனியொன்று தொடர்பாகச் செய்யப்படுதலாகாது.

(2) ஒராம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட வரிவிலக்கு நிவாரணத்துக்குத் தகைமைபெறுவதற்கென, முயற்சி மூலதனக் கம்பெனி (1)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தில் பணத்தொகையொன்றைப் பின்வருமாறு முதலீடு செய்திருத்தல் வேண்டும் :—

(i) அத்தகைய கம்பெனி எந்த ஆண்டில் அதன் வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடங்குகின்றதோ அந்த ஆண்டிலிருந்து இரண்டாவது ஆண்டின்போது அத்தகைய கம்பெனியின் மொத்த ஒப்புரவு மூலதனத்திலான நாற்பது சதவீதத்துக்குக் குறையாத ஒரு பணத்தொகையை, அந்த இரண்டாவது ஆண்டின் முடிவில் அல்லது அதற்கு முன்னர் முதலீடு செய்திருத்தல் வேண்டும் ;

(ii) அத்தகைய கம்பெனி அதன் வாணிபத் தொழிற்பாடுகளை எந்த ஆண்டில் தொடங்குகின்றதோ அந்த ஆண்டிலிருந்து மூன்றாவது ஆண்டின்போது அத்தகைய கம்பெனியின் மொத்த ஒப்புரவு மூலதனத்திலான எண்பது சதவீதத்துக்குக் குறையாத ஒரு பணத்தொகையை, அந்த மூன்றாவது ஆண்டின் முடிவில் அல்லது அதற்கு முன்னர் முதலீடு செய்திருத்தல் வேண்டும் ;

(iii) வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடங்குகின்ற ஆண்டிலிருந்து நான்காம், ஐந்தாம் ஆண்டுகளின்போது அத்தகைய கம்பெனியின் மொத்த ஒப்புரவு மூலதனத்திலான எண்பது சதவீதத்துக்குக் குறையாத ஒரு பணத்தொகையை, முறையே அத்தகைய நான்காம், ஐந்தாம் ஆண்டுகளின் முடிவில் அல்லது அதற்குமுன்னர் முதலீடு செய்திருத்தல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின்கீழ் விலக்களிப்பைக் கோரியுள்ள கம்பெனியொன்று இவ்வுப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமாயின் அல்லது கம்பெனியானது எந்த வரிமதிப்பீட்டாண்டில் வாணிபத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து முதல் இரண்டு ஆண்டுகளின் போது எவையேனும் பங்கிலாபங்கள் வெளிப்படுத்தப்படின், அத்தகைய கம்பெனிக்கு அளிக்கப்படும் விலக்களிப்பு மீளப்பெறப்படுதல் வேண்டுமென்பதுடன், இயைபான ஆண்டுகளுக்காக வரிமதிப்பீடொன்று வழங்கப்படுதலும் வேண்டும்.

(3) வெளிநாட்டுக் கம்பெனிகளில் முதலீடுகள் செய்யப்படலாம் என்பதுடன், அத்தகைய முதலீடுகள் இப்பிரிவின் நோக்கத்துக்காகக் குறித்த முதலீடாகக் கொள்ளப்படுதலும் வேண்டும் அத்தகைய கம்பெனி எந்த ஆண்டில் அதன் வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடங்குகின்றதோ அந்த ஆண்டிலிருந்து இரண்டாவது ஆண்டின்போது அத்தகைய கம்பெனியின் ஒப்புரவு மூலதனத்தில் பத்து சதவீதத்துக்கு அதிகமாக இருத்தலாகாது என்பதுடன், முறையே மூன்றாவது ஆண்டின் போதும் அடுத்துப் பின்னரான ஆண்டுகளின் போதும் அத்தகைய கம்பெனியின் ஒப்புரவு மூலதனத்தில் இருபது சதவீதத்துக்கு அதிகமாக இருத்தலாகாது.

(4) அத்தகைய கம்பெனி எந்த ஆண்டில் அதன் வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடங்குகின்றதோ அந்த ஆண்டு உட்பட முதல் மூன்று ஆண்டுகளின்போதும், (2) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்படும் ஆகக்குறைந்த முதலீடுகளுக்கு விஞ்சுவதாயுள்ள ஏதேனும் ஒப்புரவு மூலதனம் அரசாங்கப் பிணைப்பொறுப்புகளில் முதலீடு செய்யப்படலாம் என்பதுடன், அத்தகைய முதலீடு ஒரு குறித்த முதலீடாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "முயற்சி மூலதனக் கம்பெனி" என்பது —

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும், நூறு மில்லியன் ரூபாவை ஆகக்குறைந்த வழங்கப்பட்ட பங்குமூலதனமாகக்கொண்டதும், (1) ஆம், (2) ஆம், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான ஏதேனும் கருத்திட்டம் தொடர்பாக ஒப்புரவு முதலீட்டை வழங்குகின்ற வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதும்

(i) இணையான முதலீட்டுத்துறையில் தேவைப்பட்ட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள ஒரு முகாமைக் கம்பெனியுடன் தொழினுட்பச் சேவை உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதும் ; அல்லது

(ii) வெளிநாட்டு முயற்சி மூலதனக் கம்பெனிகளினாலும் தேவைப்பட்ட உயர்தொழில்சார் முயற்சி மூலதன முகாமைத்துவ அனுபவத்தைக் கொண்டுள்ள ஏனைய உள்நாட்டுப் பணியாட்டொகுதியினரினாலும் பயிற்சியளிக்கப்பட்டுள்ள உயர் தொழில்சார் பணியாட்டொகுதியினரை அதன் ஊழியத்தில் கொண்டுள்ளதும்

ஆன ஒரு கம்பெனி என்று பொருளாகும்.

(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடங்குகின்ற ஆண்டு, முயற்சி மூலதனக் கம்பெனியின் வழங்கப்பட்ட ஒப்புரவு மூலதனம் எந்த ஆண்டின் நூறு மில்லியன் ரூபாவை எய்தியுள்ளதோ அந்த ஆண்டாதல் வேண்டுமென்பதுடன், 2008 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற வாணிபத் தொழிற்பாடுகள் தொடர்பில் ஏற்புடையனவாதலுமாகாது.".

உல்லாசப் பயணிகளுக்கு மாடினோர் இல்லங்களை அல்லது தோட்டப் பங்களாக்களை வழங்கும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளுக்கு வருமானவரியிலிருந்து விலக்களித்தல்.

21ஐ. (1) இரண்டாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளின், 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்து கிடைக்கும் எவையேனும் இலாபங்களையும் வருமானங்களையும் தவிர) அத்தகைய ஆள் அத்தகைய வியாபாரத்தில் இலாபமடையத் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டில் அல்லது வாணிபத் தொழிற்பாட்டைத் தொடங்கிய தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் இவற்றுள் எது முந்தியதோ அதிலிருந்து, மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :

(2) (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், உல்லாசப் பயணிகளுக்கு மாடினோர் இல்லங்களில் அல்லது தோட்டப் பங்களாக்களில் பதிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து பத்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு தங்குமிட வசதி வழங்கும் திட்டத்தின் கீழ் 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உல்லாசப் பயணச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை உல்லாசப் பயணச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அதன் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(உ) 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் வர்த்தகத்தில் வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்

தொழிலில் உற்பட்ட ஒரு நட்டத்தின் தொகை (இப்பிரிவின் கீழ் கழிப்பனவுசெய்யப்படக்கூடிய தாகவுள்ள, 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதியிலிருந்து அவரினால் உறப்பட்ட ஏதேனும் முன்கொணரப்பட்ட நட்டம் தவிர) பின்வருமாறு கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும் :—

(i) ஒரு வர்த்தகத்திலிருந்தான அல்லது வியாபாரத்திலிருந்தான ஏதேனும் நட்டம், வர்த்தகத்திலிருந்தான மற்றும் வியாபாரத்திலிருந்தான நியதிச்சட்டமுறையான வருமானத்திலிருந்து மட்டுமே கழிப்பனவு செய்யப்படுதல்;

(ii) ஓர் உயர் தொழிலிருந்தான ஏதேனும் நட்டம், உயர்தொழிலிலிருந்தான நியதிச்சட்டமுறையான வருமானத்திலிருந்து மட்டுமே கழிப்பனவு செய்யப்படுதல் ;

(iii) ஒரு வாழ்க்கைத் தொழிலிலிருந்தான ஏதேனும் நட்டம், வாழ்க்கைத் தொழிலிலிருந்தான நியதிச் சட்டமுறையான வருமானத்திலிருந்து கழிப்பனவு செய்யப்படுதல்.

கழிப்பனவு செய்யப்பட முடியாத ஏதேனும் மீதிநட்டம் முன் கொணரப்பட்டு, இப்பிரிவின்கீழ் நட்டங்களை முன் கொணருதல் பற்றிய வரையறைகளுக்கமைய, மேலே குறிப்பிடப்பட்டவாறு நியதிச்சட்டமுறையான வருமானத்திலிருந்து, அடுத்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்தும் அவ்வாறாகவும் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், முற்போந்த ஏற்பாடுகள் பின்வரும் ஏதேனும் நட்டத்துக்கு ஏற்புடையனவாதலாகாது :—

(i) நட்டமானது, 23 ஆம் பிரிவின்கீழ் கழிப்பனவு செய்யப்படற்பாலதல்லாத ஆண்டுத்தொகை, நில வாடகை, அரசுரிமைப் பணம் அல்லது வட்டி என்பவற்றின் விஞ்சுதலாகவுள்ள ஏதேனும் கொடுப்பனவுகளைக் குறிக்குமானால் ;

(ii) நட்டமானது, 23 ஆம் பிரிவின்கீழ் தேய்மானத்துக்கான அல்லது புதுப்பித்தல் ஆகுசெலவுக்

கான ஏதேனும் விடுதொகையைக் குறிக்குமானால் :

(iii) அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காக எம்மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்து அத்தகைய நட்டம் கழிக்கப்படுகின்றதோ அம்மொத்த நியதிச்சட்ட வருமானம் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாவிட்டால்";

(2) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1இ) எவரேனுமாளின் வரிமதிப்பீட்டாண்டுக்குரிய வருமானம் XVIஆ என்னும் அத்தியாயத்திற்கிணங்க, அதிலிருந்து வருமானவரி கழிப்பனவு செய்யப்பட்டுள்ளதும், 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் அரசாங்க நிறுவனத்திடமிருந்து —

(அ) ஏதேனும் வெகுமதிகளைக் கொடுப்பனவு செய்வதற்கான ஏதேனும் திட்டத்தின் கீழ் தகைமையளிப்பதென்ற முறையில் அத்தகைய ஆளினால் பெறப்படுவதுமான அத்தகைய வெகுமதியை ;

(ஆ) ஒரு ஆற்றப்பணிப் பங்கைப் பகிர்ந்தளிப்பதற்கான ஏதேனும் திட்டத்தின்கீழ் அத்தகைய ஆளினால் பெறப்படுவதுமான அத்தகைய ஆற்றப்பணிப் பங்கை,

உள்ளடக்குதலாகாது.".

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "உள்ளவொரு நட்டத்தொகை." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :—

"உள்ளவொரு நட்டத்தொகை :"

ஆயின், எவ்வாறாயினும், (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அமைச்சர், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அந்தக் குறித்த செயற்பாடு முக்கியமானதாக வுள்ளவிடத்து அந்தக் குறித்த செயற்பாட்டைக் கருத்திற் கொண்டு அது தொடர்பாக நட்டமொன்று முன் கொணரப்படக்கூடியதான ஆகக்கூடிய காலப்பகுதியைத் தீர்மானிக்கலாம் : அத்துடன்"

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "அல்லது 20 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "அல்லது 20 ஆம் பிரிவின்கீழ் அல்லது 21அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 21ஆ என்னும் பிரிவின்கீழ் அல்லது 21இ என்னும் பிரிவின்கீழ் அல்லது 21ஈ என்னும் பிரிவின்கீழ் அல்லது 21உ என்னும் பிரிவின்கீழ் அல்லது 21ஊ என்னும் பிரிவின்கீழ் அல்லது 21எ என்னும் பிரிவின்கீழ் அல்லது 21ஏ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், —

(அ) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் "வீடமைப்புக் கடன் எனப் பொருள்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வீடமைப்புக் கடன் எனப் பொருளாகும்:" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; .

(ஆ) அவ்வுட்பிரிவில் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(ஓ) பிரிவு 21எ என்பதன்கீழ் முயற்சி மூலதனக் கம்பெனியொன்று வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படும் காலப்பகுதியின்போது அத்தகைய கம்பெனியினால் வழங்கப்பட்ட, ஏற்கனவேயுள்ள பங்குகள் தவிர்ந்த,

சாதாரணப் பங்குகள் வைத்திருப்பாளரினால் கொள்வனவு செய்யப்படுவதில் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத ஏதேனும் முதலீட்டின் ஐம்பது சதவீதமும் : அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் –

(i) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்தியில், "ஒரு இலட்சம் ரூபா என்பதைற்றில் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகையை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபா என்பதைற்றில் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகையை;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :";

(ii) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்தியை அடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :–

"(vii) அவ்வரிமதிப்பீட்டாண்டில் அவரினால் செய்யப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படும் எல்லாத் தகைமை பெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும், அவரது வரிமதிப்பிடற்குரிய தாள வருமானத்தின் மூன்றிலொரு பங்கை அல்லது அத்தகைய தகைமை பெறும் கொடுப்பனவை, இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதனை விஞ்சுதலாகாது :";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் –

(i) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "(ஆ) அத்துடன் (ஏ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக, "(ஆ), (ஏ) அத்துடன் (ஓ) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களையும் எழுத்துக்களையும் இடுவதன்மூலமும் :

(ii) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "பத்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அப்பந்தியின் முடிவில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :–

(iii) அக்கம்பெனியினால் செய்யப்படும் (2)ஆம் உட்பிரிவில் (ஓ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் எல்லாத் தகைமைபெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும், அதன் வரிமதிப்பீட்டிற்பாலதான வருமானத்தின் ஐந்திலொரு பங்கை அல்லது அத்தகைய தகைமைபெறும் கொடுப்பனவை, இவற்றுள் எது குறைந்ததாகவுள்ளதோ அதனை விஞ்சுதலாகாது."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "அத்தகைய பணத்தொகையானது, மூலதன வருவாயொன்றாகக்." என்னும் சொற்களிலிருந்து அக்காப்புவாசகத்தின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"அத்தகைய பணத்தொகையானது –

(i) 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்குமுன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஆகக்கூடியது இருபத்தைந்து சதவீதத்திலான வரிவிதிக்கப்படற்பாலதாகவுள்ள இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளாக ஒரு மூலதன வருவாயாகும் ;

(ii) ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக முதலாம் அட்டவணையில்

குறித்துரைக்கப்படும் தேறுதான வீதத்தில் வரிவிதிக்கப்படற்பாலதான பங்கிலாபத்திலிருந்தான வருமானமாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "பத்து சதவீதம் என்னும் வீதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக் கப்படும் தேறுதான வீதத்தில்" என்னும் சொற்களை இடு வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "பதினைந்து சதவீதம் என்னும் வீதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2003, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குப் பதினைந்து சதவீதம் என்னும் வீதத்திலும், 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண் டிற்கும் இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தேறுதான வீதங்களிலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் "பதினைந்து சதவீதம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்து சதவீதம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, "பதினைந்து சதவீதம் என்னும் வீதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்திற்கான ஆறாம் அட்டவணையிற் குறித்து ரைக்கப்படும் தேறுதான வீதத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, "பதினைந்து சதவீதம் என்ற வீதப்படி." என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக் கப்படும் தேறுதான வீதத்தில்" என்னும் சொற்களை இடுவ தன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பதினைந்து சதவீதப்படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்படும் வீதத்தில்" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பதினைந்து சதவீதப்படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்படும் வீதத்தில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் :

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, "பதினைந்து சதவீதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் தோதான வீதத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "(இப்பிரிவில் இதனகத்துப் பின்னர்" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "அத்தகைய குறித்துரைக்கப்பட்ட இலாபங்கள், இச்சட்டத்தில் ஏனைய ஏற்பாடுகளில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் தோதான வீதங்களில் வரி விதிக்கப்படற்பாலனவாதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் தோதான வீதங்களில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இருபது சதவீதம் என்ற வீதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் தோதான வீதத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) உட்பிரிவில் "பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டத்திற்கான ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான தோதான வீதத்தில்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் —

"(3) 21உ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட ஏதேனும் கம்பெனியின் இலாபங்களும் வருமானமும் எக்காலப்பகுதியின்போது வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ அக்காலப்பகுதி முடிவுற்ற பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு அத்தகைய கம்பெனியின் 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும், இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும், பின்வரும் வீதத்திலான வருமான வரி விதிக்கப்படற்பாலன வாதல் வேண்டும் :—

(அ) அத்தகைய கம்பெனி, 40 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியில் அல்லது

பாரம்பரியமற்ற பண்டங்களின் ஏற்று மதியில் அல்லது கருதப்பட்ட ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பெனியாக விருப்பின் இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையின் 7, 12 அல்லது 14 என்னும் விடயத்தில் குறித்துரைக்கப் பட்ட வீதமான வீதத்தில்;

(ஆ) அத்தகைய கம்பெனி (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பு முயற்சிகளும் செயற்பாடுகளும் தவிர்ந்த வேறேதேனும் பொறுப்பு முயற்சியில் அல்லது செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பெனியாகவிருப்பின், இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப் பட்ட வீதமான வீதத்தில்;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ii) ஆம் விடயத்தில் "இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருத்தல் வேண்டும்.:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(ஆ) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் காப்பு வாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"ஆயின், எவ்வாறாயினும், 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு, உட்பந்தி (அ) விலும் (ஆ) விலும் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் பங்கிலாபம், இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையில்

குறித்துரைக்கப்படும் வீதங்களில் வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பதினைந்து சதவீதமாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "2003, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்குப் பதினைந்து சதவீதமாகவும், 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் தொகையான வீதத்திலும் இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2003, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2003, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு, "எவையேனும் தகைமைபெறும் ஏற்றுமதி இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து" என்னும் சொற்களிலிருந்து அப் பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "எவையேனும் தகைமைபெறும் ஏற்றுமதி இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய வருமானம் இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

துரைக்கப்படும் தோதான வீதத்தில் வரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.". என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, "பதினைந்து சதவீதப்படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் தோதான வீதத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு, "ஏதேனும் தகைமைபெறும் ஏற்றுமதி இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து," என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "எவையேனும் தகைமைபெறும் ஏற்றுமதி இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய வருமானம் இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் தோதான வீதங்களில் வரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு, "பதினைந்து சதவீதப்படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் தோதான வீதங்களில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :—

"ஆயின், எவ்வாறாயினும், 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு வரிவிதிக்கப்படற்பாலதாகவுள்ள, (அ), (ஆ), (இ) என்னும் உட்பந்திகளிற் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் பங்கிலாபம், ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான வீதங்களில் வரிவிதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும் :" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :—

"ஆயின், எவ்வாறாயினும், 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு வரிவிதிக்கப்படற்பாலதாகவுள்ள, உட்பந்திகள் (அ), (ஆ), (இ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் பங்கிலாபம் இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கின்றவாறான வீதத்தில் வரிவிதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்."

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவு, "பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் என்ற வகையில்" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ ஆம் பிரிவைத் திருத்துதல்.

2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபத்தை உள்ளடக்குகின்ற விடத்து.

"(i) பணவகையில் அல்லது பணஞ்செலுத்துவதற்கான ஒரு கட்டளை என்ற வகையில் அல்லாத ;

(ii) 61 ஆம் பிரிவின் உட்பிரிவு (1அ) இன் கீழ் வரிக் கழிப்பனவின்றி 11 ஆம் பிரிவின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படாத இன்னுமொரு கம்பெனியிடமிருந்து பெறப்படும் பங்கிலாபத்தி லிருந்து, அத்தகைய கம்பெனி அத்தகைய வரியைக் கழிப்பனவு செய்வதற்கு உரித்துடையதாகவுள்ளதா இல்லையா என்பதனைப் பொருட்படுத்தாது.

அத்தகைய பங்கிலாபத்திலிருந்தான வருமானம் இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான தேறான வீதங்களில் வரி விதிக்கப்படல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆ ஆம் பிரிவைத் திருத்துதல்.

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 48ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்படும் பங்கிலாபத்தின் மீதான வருமானவரி விதிப்பு.

48ஆ. இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனுமாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்படும் ஒரு பங்கிலாபத்தை உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய பங்கிலாபத்தைக் குறிக்கின்றதான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், இரட்டித்த வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கான ஏதேனும் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கமைவாக இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான தேறான வீதத்தில் வரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

(அ) தொகையாகக் கருந்தேயிலை, கிரேப் றப்பர், தகட்டு றப்பர், கழிவு றப்பர், றப்பர்பால், அல்லது உடன் தேங்காய் என்பன தவிர, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியினால் மேலதிக உற்பத்தி அல்லது தயாரிப்பு இல்லாமல் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியினால் ஏற்றுமதிக்கென ஏதேனும் பண்டத்தை ; அல்லது

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :– முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இப்பிரிவின் அடுத்து வரும் ஏற்பாடுகளுக்கிணங்க" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டத்திற்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான தோதான வீதங்களில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்குவதன் மூலமும்.

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இப்பிரிவின் அடுத்துப் பின்வரும் ஏற்பாடுகளுக்கு இணங்க," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் தோதான வீதங்களில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதனூடாகவும் :—

"(ii) தொகையாகக் கருந்தேயிலை, கிரேப் றப்பர், தகட்டு இறப்பர், கழிவு இறப்பர், இறப்பர் பால் அல்லது உடன் தேங்காய், என்பவற்றின் ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்டதாயினுஞ்சரி அல்லாததாயினுஞ்சரி, பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை ; அல்லது";

(2) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "இப்பிரிவின் நோக்கங்களுக்காக" என்னும் சொற்களிலிருந்து "எனப் பொருள்படும்." என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் :—

"இப்பிரிவின் நோக்கங்களுக்காக "பாரம்பரியமற்ற பண்டங்கள்" என்பது, தொகையாகக் கருந்தேயிலை தவிர்ந்த கிரேப் றப்பர், தகட்டு இறப்பர், கழிவு இறப்பர், இறப்பர்பால் அல்லது உடன் தேங்காய்கள் எனப் பொருள்படும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52அ ஆம் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 52அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அந்தத் தனியாளின் வெளிநாட்டு வருமானம் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் அல்லது (ஆ) என்னும் பந்திகளின் கீழ் விலக்களிக்கப்பட்டுள்ளபோது அந்தத் தனியாளின் வரிமதிப்பிடத்தக்கதான வருமானத்தின் மீது வருமானவரி செலுத்தப்படுதல்.

52அ. (1) ஒன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் தனியாள், 2003, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு அப்பிரிவுகளின் கீழ் விலக்களிக்கப்படும் வழியத்திலிருந்தான இலாபங்களையும் வருமானவரி விதிக்கப்படற்பாலதான வேறெவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் பெறுகின்றவிடத்து, வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது அத்தகைய ஆள்னாற் செலுத்தப்படற்பாலதான வருமானவரி, இச்சட்டத்தின் வேறெவையேனும்

ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பின்வருமாறு கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய தனியாளின் நியதிச் சட்டமுறையான வருமானம், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவிராது 4(1) (இ) என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நன்மைகள் தவிர்ந்த 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தையும் ஊழியத்திலிருந்தான வேதனாதிகளையும் ஏனைய நன்மைகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்கும் அத்தகைய தனியாளின் வரிமதிப்பீட்டிற்குரிய வருமானமும் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானமும், முறையே 29 ஆம் பிரிவிலும், 30 ஆம் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிச்சயிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்கும் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீதான வருமானவரி, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் வரிவீதங்களைப் பிரயோகித்துக் கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் கீழ் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் கிடைக்கக் கூடியதாகவுள்ள வேறு வரிவரவுகளுடன் சேர்த்து, விசேட ஊழிய வரிவரவொன்று, கீழே கணிப்பிடப்பட்டவாறு, வேறு கடன்வரவுகளை அளிக்க முன்னர் அளிக்கப்படுதல் வேண்டும்.

(6) (அ) இந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட இணையான ஆண்டுக்கான வருமானத்தில் விசேட ஊழிய வரிவரவைக் கணிக்கும் நோக்கத்துக்காக,

அது, அத்தகைய ஆண்டுக்கு அத்தகைய ஆளின், மொத்த நியதிச்சட்டமுறையான வருமானமாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், 29 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கப்படற்பாலனவான எவையேனும் கழிப்பனவுகளும், அத்தகைய ஆளுக்கு அத்தகைய ஆண்டுக்காக 30 ஆம் பிரிவின்கீழ் வருமதியாகவுள்ள ஏதேனும் விடுதொகையும் அத்தகைய நியதிச்சட்டமுறையான வருமானத்திலிருந்து கழிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய மொத்த நியதிச் சட்ட முறையான வருமானத்தின் மீதி ஏதேனுமிருப்பின் அது, வரிவிதிக்கப்படற்குரியதான வருமானமாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், வரியானது, அத்தகைய வரிவிதிக்கப்படற்குரியதான வருமானத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை ஏற்புடையனவாக்கி கணக்கிடப்படுதலும் வேண்டும் :

(ஆ) (அ) வின் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க கணக்கிடப்பட்ட வரித்தொகை, விசேட ஊழிய வரி வரவாகவிருத்தல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவுக்கிணங்க கணிப்பிடப்பட்ட விசேட ஊழிய வரவொன்று, செலுத்தப்பட வேண்டிய எவையேனும் வருமானத்துக்கெதிராக எதிரீடு செய்யப்படுவதற்காகக் கிடைக்கக்கூடிய வேறான வேறெவையேனும் வரிவரவுகளுக்கான வரவை எடுக்குமுன்னர் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(8) இந்த விசேட ஊழியவரி வரவிலிருந்து எழக்கூடியவையான ஏதேனும் அத்தகைய வரவின் ஏதேனும் மிகைத்தொகை மீளளிக்கப்படற்பாலதாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கருதப்படுதல் வேண்டும் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பந்தியின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(உ) 2003, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக முப்பது சதவீதத்துக் குறையாத ஒரு வீதத்தில் இப்பிரிவின் (1) ஆம் பந்தியின் கீழ் வரிசெலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஏதேனும் கம்பெனியின் விடயத்தில், அத்தகைய கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இரண்டரைச் சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகையைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்தகைய வரி, அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட மனித மூலவள நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வரித் தொகை மனித மூலவள அறக்கொடை நிதியம் தாபிக்கப்படும்வரை திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.".

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் —

(அ) "அவ்வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்துடன் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2003, ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாகவுள்ளவிடத்து" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "சமமான ஒரு தொகையையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமமான ஒரு தொகையையும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் :—

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(இ) 2003 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் அத்தகைய கம்பெனியின் பண அனுப்புகைகள் உள்ளவிடத்து, அத்தகைய கம்பெனியின் பண அனுப்புகைகளின் கூட்டு மொத்தத்தொகையின் பத்து சதவீதத்துக்குச் சமமான ஒரு பணத்தொகையையும்,";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "அக்கம்பெனியின் இலாபங்களிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தின் கீழ் வருமானவரி விதிக்கப்படற்பாலதான அக்கம்பெனியின் இலாபங்களிலிருந்தும் வருமானத்திலிருந்தும் அத்துடன் எக்கம்பெனியின் இலாபங்கள் இலங்கையில் வரிவிதிக்கப்படற்பாலனவாகின்றனவோ அக்கம்பெனியால் இலங்கை கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வர்த்தக வியாபாரம், உயர்தொழில் அல்லது தொழக்கைத் தொழில் தொடர்பில் அத்தகைய கம்பெனியால் அல்லது அதன் சார்பில் இலங்கைக்கு வெளியே பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையிலிருந்தும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் "உரித்துடையதாதல் வேண்டும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக பிரிவு "8(அ) என்பதன் விடயங்கள் (IX), (XI), (XV), (XVII), (XX), (XXI), (XXXIX), (LIV), (LXIV), (LXV), (LXVI), (LXIIL), (LXXIII) அத்துடன் (LXXIV); என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்திற்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பங்கிலாபம் புறநீங்கலாக) கழிப்பனவு செய்தல் வேண்டும்;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் "அல்லது அதன் தொடர்பில்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது அதன் தொடர்பில் ; அல்லது"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அக் காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(இ) (1அ) என்னும் உட்பிரிவின்கீழான வருமானவரியின் கழிப்பனவுக்கமைய, 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் வேறேதேனும் கம்பெனியிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்தின் தொகைக்கு அல்லது அதன் தொடர்பில்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 63அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது, அச் சட்டவாக்கத்தின் 63அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள், தரும நிறுவனங்கள் முதலியவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.

63அ. இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள், ஏதேனும் தரும நிறுவனத்துக்கு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவுள்ளதும் 96 ஆம் பிரிவின் கீழ் வரிமதிப்பிடற்குரியதுமான ஏதேனும் ஆட்கள் குழுவுக்கு ஏற்புடையனவாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(4) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்துக்கு அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அல்லது விதிக்கு இணங்க, பங்குகள், பிணையங்கள் அல்லது வேறு முதலீடுகள் என்பவற்றில் முதலீடு செய்கின்ற வியாபாரத்தில் ஈடுபடுகின்ற ஏதேனும் கூறுநம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம், இச்சட்டத்தின் நோக்கத்துக்காகக் குறித்துரைக்கப்பட்ட துறைகளில் முதலீடு செய்கின்ற கூறுநம்பிக்கைப்பொறுப்பாக அல்லது பரஸ்பர நிதியமாக இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(5) கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாகவுள்ளதும், இப்பிரிவின் கீழ் வருமானவரிக்கு வரிமதிப்பிடற்குரியதுமான ஏதேனும் ஆட்கள் குழுவுக்கு, X ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**45.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "கொடுத்துதவுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொடுத்துதவுதல் வேண்டும் :" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும் :

"ஆயின், எவ்வாறாயினும், முற்போந்த ஏற்பாடுகள்" ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு எந்தத் தனியாளின் வருமானம் பின்வருவனவற்றுள், அதாவது —

(அ) 4 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான வையும், நான்கு இலட்சத்து இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத வருமானவரி விதிக்கப் படற்பாலனவையும், XIV ஆம் அத்தியாயத் தின் கீழான வருமானவரி அத்தகைய இலா பத்தினதும் வருமானத்தினதும் முழுமொத்தத் தொகையின் மீது தொழில்தருநரினால் கழிப்பனவு செய்யப்பட்டுள்ளதுமான ஊழி யத்திலிருந்தான இலாபங்கள் ;

(ஆ) வரி அறவிடப்படற்பாலதான எந்தப் பங்கி லாபங்களிலிருந்து, 61 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் பத்துச்சதவீத வரி கழிப்பனவு செய்யப் பட்டுள்ளதோ அந்தப் பங்கிலாபங்கள் ;

(இ) வரி அறவிடப்படற்பாலதான எட்டியிலிருந்து கிடைக்கும் எந்த வருமானத்திலிருந்து 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின் கீழ் பத்துச் சதவீதப்படி வருமானவரி கழிப்பனவு செய்யப்பட்டுள்ளதோ அந்த வருமானம்.

என்பவற்றுள் ஒன்றை மாத்திரம் அல்லது அவற்றின் ஒன்றிப்பொன்றைக் கொண்டிருக்கின்றதோ அந்தத் தனியாளுக்கு ஏற்புடைத்தாக மாட்டா.

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "வரிமதிப்பீட்டாளர் ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிரதி ஆணையாளர் ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(4) அப்பிரிவின் நாலாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்தப்படுவதன் மூலமும் ;

"(4அ) ஆளெவரும் (4) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிப்பொன்றைக் கிடைக்கப்பெறுமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய அறிவிப்பு கிடைக்கப்பெற்ற முப்பது நாட்களுக்குள் அத்தகைய விபரத்திரட்டை உகந்த விபரத்திரட்டாக்குவதற்குத் தேவைப்படும் அவசியமான விபரங்களைக் கொடுத்துதவுதல் வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய விபரத்திரட்டு தொடர்பில் ஏற்புடைத்தாகவும் மாட்டா.

(5) அப்பிரிவின் (5) உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இடப்படுகின்றது :-

"(5) ஆளெவரும் ஒன்றுக்கு மேற்பட்ட ஏதேனும் வியாபாரத்தை, வர்த்தகத்தை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டுநடாத்துமிடத்தும் அல்லது பிரயோகிக்குமிடத்தும் அத்துடன்,

அத்தகைய வியாபாரத்தில், வர்த்தகத்தில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலிருந்து கிடைக்கும் இலாபங்களும் வருமானமும், வெவ்வேறு விதங்களில் வரிவிதிப்பட்டற்பாலதாயிருக்குமிடத்தும், அத்தகைய ஆள், அத்தகைய செயற்பாடு ஒவ்வொன்றிலுமிருந்து கிடைக்கும் இலாபங்களையும் வருமானத்தையும் வெவ்வேறாக அடையாளம்காணும் விதத்தில் கணக்குக்கூற்றுக்களைத் தயாரித்துப் பேணுதல் வேண்டும் —

(6) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அவரைத் தேவைப்படுத்தலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவரைத் தேவைப் படுத்தலாம்:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன்மூலம் :

"ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய விவரத்திரட்டு அல்லது விபரம் எதுவும் இணைபால வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னர் வரிமதிப் பீட்டாளர் ஒருவரால் அத்தகைய ஆளிடமிருந்து கோரப்படுதலாகாது.".

(7) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில்

(அ) அவ்வுட்பிரிவில் "அறிவித்தல் கொடுக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறிவித் தல் கொடுக்கலாம்:". என்னும் சொற்களை இடுவதன்மூலமும் :

(ஆ) அவ்வுட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும்:

"ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய அறிவித்தல், இயைபான வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னர் வரிமதிப்பீட்டாளர் ஒருவரால் வழங்கப்படுதலாகாது;".

(8) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவில் "அறிவித்தல் கொடுக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறிவித்தல் கொடுக்கலாம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன்மூலமும்:–

"ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய அறிவித்தல் இயைபான வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னர் வரிமதிப்பீட்டாளர் ஒருவரால் வழங்கப்படுதலாகாது,".

(9) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவில் –

(அ) "கட்டுக்காப்பில் வைத்திருக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கட்டுக்காப்பில் வைத்திருக்கலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும் :–

"ஆயின், எவ்வாறாயினும், வரிமதிப்பீட்டாளர் ஒருவரால் அத்தகைய வைத்திருத்தலானது இயைபான ஆண்டின் முடிவிலிருந்து ஐந்து ஆண்டுகாலப்பகுதி கழிந்த பின்னர் செல்லுபடியுடையதாதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 99 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**46.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 99 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்கள் கொண்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூற்றொன்று உட்பட, ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான நியதிச்சட்ட வருமானத்தை நிச்சயிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான எல்லா விவரங்களும் கொண்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் —

(i) அக் காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியில் "கொடுத்துதவுதல் வேண்டும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொடுத்துதவுதல் வேண்டும்:" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ii) அக் காப்புவாசகத்தின் பந்தி (அ) என்பதனை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும் :—

"உட்பந்தி (அ)வின் ஏற்பாடுகள், 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று அல்லது இருநாற்றி

ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத ஆண்டு மொத்த விற்பனை வரவையுடைய அல்லது ஆண்டொன்றுக்கு நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத தேறிய இலாபத்தையுடைய கம்பெனி தவிர்ந்த வேறு ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடைத்தாதல் ஆகாது.":

(iii) அவ்வுட்பிரிவிற்கான காப்புரைவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :—

"உட்பந்தி (ஆ) வின் ஏற்பாடுகள், 2003, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறைவான ஆண்டு மொத்த விற்பனை வரவையுடைய கம்பெனிக்கு அல்லது பங்குடைமையொன்றின் விடயத்தில் இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறைவான பிரிபடற்பாலதான இலாபத்தையுடைய பங்குடைமைக்கு அல்லது வேறு எவரேனும் தொடர்பில் இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறைவான இலாபத்தையுடைய எவரேனும் ஆளைத் தவிர ஏதேனும் பங்குடைமைக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஏற்புடைத்தாதலாகாது:".

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :

"இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனி ஒன்றுக்கு அல்லது இருநூற்றி ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத ஆண்டு மொத்த விற்பனை வரவையுடைய அல்லது வியாபாரத்திற்கேற்ப ஆண்டொன்றுக்கு நூறு

மில்லியன் ரூபாவுக்குக் குறையாத தேறிய இலாபத்தை அல்லது பிரிபாற்பாலதான இலாபத்தை யுடைய வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு மாத்திரம் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "கணக்காளர் ஒருவர் ; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கணக்காளர் ஒருவர் ;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பந்தியின் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் "எவரேனும் தனியாள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் தனியாள் ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும் :

"(iv) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த விற்பனை வரவு அவ்வாண்டிற்கு ஐம்பது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து அத்தகைய எதேனும் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பிலான கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவர் ;

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியில், "புறநீங்கலாக என்று பொருள்படும்." என்னும்

சொற்களுக்குப் பதிலாக, "பிறந்தவராக) என்று பொருள்படும் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் :—

(உ) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :—

(இ) "தேறிய இலாபம்" என்பது; ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாணிப நடைமுறைகளுக்கும் கணக்கீட்டு நியமங்களுக்கும் இணங்க நிச்சயிக்கப்பட்ட தேறிய இலாபம் என்று பொருள்படும்."

**47.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவு அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "குறிக்கப்பட்ட வருமானவரியானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குறிக்கப்பட்டு இவ்வத்தியாயத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்ட வருமானவரியானது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**48.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் காப்புவாசகத்தின் (ii) ஆம் பந்தியில் "விஞ்சுதல் ஆகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விஞ்சுதல் ஆகாது;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அக்காப்புவாசகத்தின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(iii) 2002 நவெம்பர் 6 ஆம் திகதியன்றுள்ளவாறு செலுத்தப்படாதிருக்கின்ற ஏதேனும் தண்டம் —

(அ) அத்தண்டம், எந்த தவணை தவறுகையிலுள்ள வரி தொடர்பாகச் செலுத்தப்

பாற்பாலதோ, தவணை தவறுகையிலுள்ள வரி, அத்தகைய தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செலுத்தப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய தண்டம் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆ) தவணை தவறுகையிலுள்ள அத்தகைய வரியின் ஒருபகுதி அத்தகைய தேதியன்று அல்லது அதற்குமுன் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, தவணை தவறுகையிலுள்ள அத்தகைய வரியின் தொகைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான அவ்வாறு செலுத்தப்பட்ட அத்தகைய தண்டத்தின் விகிதாசாரத் தொகை விட்டுவிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் XVIஆ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

**49.** முதன்மைச் சட்டவாக்கத்தின் XVIஅ என்னும் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் இது அச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் XVIஆ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

"அத்தியாயம் XVIஆ

தகவல் தருபவர்களுக்கும் ஏனையோருக்கும் அரசாங்க நிறுவனத்தால் செய்யப்பட்ட வெகுமதி கொடுப்பனவுகளிலும், தண்டங்களின் பங்குகளிலும் எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையினால் எவரேனும் ஆளுக்குச் செலுத்தப்பட்ட லொத்தர் பரிசுகளிலும் சூதாட்ட மற்றும் பந்தய வெற்றிகளிலிருந்தும் வருமானவரிக் கழிப்பனவு.

வெகுமதிகளை அல்லது தண்டங்களைச் செலுத்தும் அரசாங்க நிறுவனம் அல்லது லொத்தர்

132அ. (அ) அரசாங்க நிறுவனம் 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் வெகுமதியை அல்லது தண்டத்தின் பங்கை :

*பரிசு முதலியவற்றைச் செலுத்தும் வேறு எவரேனும் ஆள் வருமான வரியைக் கழிப்பனவு செய்தல்.*

(ஆ) எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை லொத்தர் பரிசொன்றை சூதாட்ட வெற்றியை அல்லது பந்தய வெற்றியை,

எவரேனும் ஆளுக்குச் செலுத்துமிடத்து, விடயத்திற்கேற்ப, அத்தகைய பெறுமதியின், தண்டத்தின் பங்கின், லொத்தர் பரிசொன்றின், சூதாட்ட வெற்றியின் கொடுப்பனவு நேரத்தில் விடயத்துக்கேற்ப அத்தகைய நிறுவனம் ஆள் அல்லது பங்குடைமை அத்தகைய மொத்தக் கொடுப்பனவின் பத்துச் சதவீதப்படி வருமான வரியைக் கழிப்பனவு செய்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவின் விடயத்தில், அத்தகைய கொடுப்பனவானது, ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாதிருக்குமிடத்து மாத்திரமே வரியின் அத்தகைய கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும் ஆளொருவர், லொத்தர் பரிசொன்றை சூதாட்டங்களிலிருந்து வெற்றிகளை அல்லது பந்தயங்களிலிருந்து வெற்றிகளை காசாக அல்லாமல் வேறு வகையில் பெறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை அத்தகைய லொத்தர் பரிசின் மீதும், சூதாட்டத்திலிருந்தான வெற்றிகளின் மீதும் அத்துடன் பந்தயங்களிலிருந்தான வெற்றிகளின் மீதும் வருமான வரியின் இணையான தொகையை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

*அத்தியாயம் XV என்பதன் ஏற்பாடுகள், இவ்வத்தியாயத்தின் கீழான கழிப்பனவு தொடர்பில் ஏற்புடையனவாதல்.*

132ஆ. (1) வங்கிகளாலும் நிதி நிறுவனங்களினாலும் செலுத்தப்பட்ட வட்டியிலிருந்தான வருமான வரிக் கழிப்பனவு, அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட வருமான வரிக்கான வரவு, வங்கிகளினதும் நிதி நிறுவனங்களினதும் கடமைகள், வருமான வரிக்கழிப்பனவில் தவறுகை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மீது வரிமதிப்பீடுகளின் வழங்கீடு, தவணை

தவறுகை, மற்றும் தண்டம் என்பவற்றுக்கான மேன் முறையீடுகள் என்பன தொடர்பில் XV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், அத்தியாயத்தின் "வங்கிகளும் நிதி நிறுவனங்களும்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக 132அ என்னும் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய வெகுமதிகளில், தண்டத்தின் பங்கு, லொத்தர் பரிசுகள் சூதாட்ட வெற்றிகள் அல்லது பந்தய வெற்றிகள் ஆகியவற்றின் கொடுப்பனவுகள் அத்தகைய ஏதேனும் வெகுமதியை, தண்டத்தின் பங்கை, லொத்தர் பரிசொன்றை, சூதாட்ட வெற்றியை அல்லது பந்தய வெற்றியைச் செலுத்தும் எவரேனும் "ஆட்கள் அல்லது பங்குடைமைகளின் கடமைகள்" என்னும் சொற்களுக்கும் "வட்டி" என்னும் சொல்லுக்கும் பதிலாக, "ஏதேனும் வெகுமதி, தண்டத்தின் பங்கு, லொத்தர் பரிசு, சூதாட்ட வெற்றி அல்லது பந்தய வெற்றி" என்னும் சொற்களும் இடப்பட்டாற் போன்று அத்தகைய வெகுமதிகளின் கொடுப்பனவிலிருந்து, தண்டத்தின் பங்கிலிருந்து, லொத்தர் பரிசுகளிலிருந்து, சூதாட்ட வெற்றிகளிலிருந்து, அத்துடன் பந்தய வெற்றிகளிலிருந்து வருமான வரியின் கழிப்பனவுக்கும், அவ்வாறு கழிக்கப்பட்ட வருமான வரிக்கான, அத்தகைய வெகுமதியில் தண்டத்தினது பங்கின், லொத்தர் பரிசின், சூதாட்ட வெற்றியின் அல்லது பந்தய வெற்றியின் வருமான வரிக்கழிப்பனவின் தவணைதவறுகை, அத்தகைய ஆட்களினதும் பங்குடைமைகளினதும் மீதும் வழங்கப்படும் மதிப்பீடுகள் என்பன இவ்வத்தியாயத்தின் கீழான தவணை தவறுகைக்கான மேன்முறையீட்டின் அல்லது தண்டத்தின் கழிப்பனவுக்கு ஏற்றவாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) (அ) (i) ஏதேனும் பஞ்சாங்க மாதத்தின்போது எவரேனும் ஆளுக்குச் செலுத்தப்பட்ட வெகுமதிக

வின் கூட்டுமொத்தத் தொகையா
னது, ஒரு வெகுமதிக் கொடுப்
பனவாகக் கருதப்படுதல் வேண்
டும் என்பதுடன், அத்தகைய
கொடுப்பனவு மீதான வருமான
வரி, ஒவ்வொரு மாதத்தினதும்
கடைசி வேலைநாளன்று கழிப்
பனவு செய்யப்படுதலும் வேண்
டும்.

(ii) ஏதேனும் பஞ்சாங்க மாதத்
தின்போது எவரேனும் ஆளுக்
குச் செலுத்தப்பட்ட தண்டப்
பங்குகளின் கூட்டு மொத்தத்
தொகையானது, தண்டப் பங்குக்
கொடுப்பனவின் ஒரு பங்காகக்
கருதப்படுதல் வேண்டும் என்ப
துடன், அத்தகைய கொடுப்பன
வின்மீதான வருமானவரி, ஒவ்
வொரு மாதத்தினதும் கடைசி
வேலை நாளன்று கழிப்பனவு
செய்யப்படுதலும் வேண்டும்.

(iii) எவரேனும் ஆளுக்கு நாளொன்
றுக்குச் சூதாட்டத்திலிருந்தான
வெற்றிகளுக்காக செலுத்தப்பட்
டவை வெற்றிகளின் அல்லது
பந்தயத்திலிருந்தான வெற்றி
களுக்காகச் செலுத்தப்பட்டவை
சூதாட்டத்திலிருந்தான வெற்றி
யின் அல்லது பந்தயத்திலிருந்
தான வெற்றியின் ஒரு கொடுப்
பனவாகக் கருதப்படுதல் வேண்
டும் என்பதுடன் அத்தகைய
கொடுப்பனவின்மீதான வருமான
வரி அந்நாளின்போது கழிப்
பனவு செய்யப்படுதலும்வேண்டும்

(ஆ) லொத்தர் பரிசுகளின் விடயத்தில்,
அத்தகைய பரிசு ஒவ்வொன்றும்
அது காசாகச் செலுத்தப்பட்டதா

யினுஞ்சரி வேறு வகையிலாயினுஞ் சரி, புறம்பான பரிசொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக —

"வெகுமதிக் கொடுப்பனவுகள்" என்பது, தகவல் தருநர்களுக்கும் ஏனையோருக்கும் வெகுமதிக் கொடுப்பனவுக்கான ஏதேனும் செயற்திட்டத்தின் கீழ் அராசங்கத்தால் செலுத்தப்படும் ஏதேனும் கொடை என்று பொருளாகும் ;

"தண்டப்பங்கு" என்பது, தண்டங்களின் கொடுப்பனவுக்கான ஏதேனும் செயற் திட்டத்திற்கிணங்க அரசாங்கத்தால் சேக ரிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படும் அல்லது செலுத்தப்படும் ஏதேனும் தண்டத்தின் பங்கு என்று பொருள்படும் ;

"லொத்தர் பரிசொன்று" என்பது, எவரேனும் ஒருவரால் இலங்கையில் நடத்தப்படும் ஏதேனும் லொத்தரில் ஒன்றில் பணமாக அன்றேல் வேறு வகையில் முன்வைக்கப்பட்டு வெற்றியீட் டப்பட்ட ஏதேனும் பரிசு என்று பொருள் படும் ;

"சூதாட்டத்திலிருந்தான வெற்றி" என்பது, ஏதேனும் சூதாட்டத்தில், அல்லது ஒரு கஸினோ உட்பட, அது நடவடிக்கையில் வெற்றியேற்றமைக்குக் கிடைக்கப்பெறும் ஏதேனும் கொடுப்பனவு என்று பொருள் படும் ;

"பந்தயத்திலிருந்தான வெற்றி" என்பது, ஏதேனும் களத்தில் அல்லது களத்திற்கு

வெளியே பந்தயத்தில் வெற்றி பெற்றவருக்குக் கிடைக்கப்பெறும் ஏதேனும் கொடுப்பனவு என்று பொருள்படும்.".

(4) பிரிவு 125 இன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் —

(அ) லொத்தர் பரிசுகளிலிருந்து கழிப்பனவு செய்யப்பட்ட வரியின் மொத்தத் தொகையானது வாரத்தின் முதல் நாளன்றும், வாரத்தின் அத்தகைய முதல் நாள் வேலை நாளொன்றாக அல்லாதவிடத்து, அடுத்து வரும் வேலை நாளன்றும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் ; அத்தொகையானது அத்தகைய அனுப்புகையின் திகதியை உடனடுத்து முற்போந்த ஞாயிறு தினத்தன்று முடிவுறும் வாரத்தின்போது கழிப்பனவு செய்யப்பட்ட மொத்த வரியாதல் வேண்டும் ;

(ஆ) சூதாட்டத்திலிருந்தான வெற்றிகளிலிருந்து அல்லது பந்தயத்திலிருந்தான வெற்றிகளிலிருந்து கழிப்பனவு செய்யப்பட்ட வரியின் மொத்தத் தொகையானது வாரத்தின் முதல் நாளன்றும் வாரத்தின் அத்தகைய முதல் நாள் வேலை நாளொன்றாக அல்லாதவிடத்து அடுத்து வரும்வேலை நாளன்றும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் அனுப்பப்பட வேண்டிய தொகையானது; அத்தகைய அனுப்புகையின் திகதியை உடனடுத்து முற்போந்த ஞாயிறு தினத்தன்று முடிவுறும் வாரத்தின்போது கழிப்பனவு செய்யப்பட்ட மொத்த வரியாதல் வேண்டும்.

**50.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவு அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அவ்வரி மதிப்பீட்டாண்டு முடிவடைந்ததிலிருந்து ஆறு ஆண்டுகள் கழிந்தபின்னர்" என்னும் சொற்களுக்குப்

பதிலாக, "அல்லது வருமான விவரத்திரட்டு செய்யப்பட்டிராதவிடத்து, எந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அத்தகைய விவரத்திரட்டு தொடர்புறுத்தப்படுகின்றதோ அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழிந்தபின்னர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவிற்கான இரண்டாவது காப்புவாசகத்தில் "அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவின்பின்னர் எந்நேரத்திலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவின் பின்னரான ஐந்து ஆண்டுகளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**51.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "வரிமதிப்பீட்டாளர் ஒருவரினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எந்த வரிமதிப்பீட்டிற்கெதிராக மேன்முறையீடு முன்வைக்கப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டைச் செய்த வரிமதிப்பீட்டாளரைத் தவிர வேறு வரிமதிப்பீட்டாளர் ஒருவரினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (13) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "தீர்மானிக்கப்படல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தீர்மானிக்கப்படுதல் வேண்டும் :" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் முடிவில், பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஆயின், எவ்வாறாயினும் 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆணையாளர் தலைமையதிபதியால் பெறப்பட்ட மேன்முறையீடொன்று, அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் ஆணையாளர் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.".

**52.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (10 ஆம் உட்பிரிவில் "அறிவிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறிவிக்கப்படுதல் வேண்டும்:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஆயின், எவ்வாறாயினும், சபையானது, அத்தகைய மேன்முறையீட்டின் விசாரணை தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் விடயத்திற்கேற்ப, அதன் தீர்மானத்தைச் செய்தல் அல்லது அதன் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துதல் வேண்டும் :

ஆயின், மேலும் இச்சட்டம் தொடங்கும் தேதியில் ஏதேனும் மேன்முறையீட்டின் விசாரணை தொடங்கியுள்ளவிடத்து, இச்சட்டத்தின் தொடக்கத்திலிருந்து மேன்முறையீடு தீர்மானிக்கப்படுதல் வேண்டும் அல்லது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.".

**53.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவு அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவு உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(6அ) மேன்முறையீட்டு நீதிமன்றம், அத்தகைய நீதிமன்றத்திற்குக் குறிப்பிடப்பட்ட வழக்கின் தீர்மானம் முடிவுறாதிருக்கையில், ஆணையாளர் தலைமையதிபதியால் கொடுத்துதவப்பட்ட அறிக்கையொன்றின் அடிப்படையில், பிணக்கிலுள்ள வரியின் தொகை தொடர்பில், ஆணையாளர் தலைமையதிபதியால் அறவிடப்படற்பாலதான வரித்தொகை தொடர்பாக இடைக்காலத் தீர்மானம் ஒன்றைச் செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 144 ஆம் பிரிவைத் திருத்துதல்.

54. முதன்மைச் சட்டவாக்கத்தின் 144 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் —

(அ) அக்காப்புவாசகத்தின் (ii) ஆம் உட்பந்தியில் "செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் (ii) ஆம் உட்பந்தியின் முடிவில், பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(iii) ஏதேனும் தண்டப்பணம் 2002 நவெம்பர் 6 ஆந் தேதியன்றுள்ளவாறு செலுத்தப்படற்பாலதாக இருக்குமிடத்து —

(அ) அத்தகைய தண்டப்பணம், எந்தத் தவணை தவறுகையிலுள்ள வரி தொடர்பில் செலுத்தப்படற்பாலதானதோ அந்தத் தவணை தவறுகையிலுள்ள வரி 2002 நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்

னர் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, தண்டப்பணம் விட்டு விடப் படுதல் வேண்டும் ;

(ஆ) தவணை தவறுகையிலுள்ள அத்தகைய வரியின் ஒரு பாகம் மாத்திரம் 2002 நவெம்பர் 6 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட்டுள்ள விடத்து, செலுத்தப்பட்ட அத்த கைய வரியின் தொகைக்கு ஏற் றிக் கூறப்பட ற்பாலதான அத்த கைய தண்டப்பணத்தின் விகி தாசாரத் தொகை விட்டுவிடப் படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் ;

"(12அ) ஆணையாளர் தலைமையதிபதியால் பிடித்து வைத்திருக்கப்படும் ஏதேனும் வரி முழுமை யாகவோ, பகுதியளவிலோ மேன்முறையீட்டின் தீர்வின்மீது செலுத்தப்பட ற்பாலதாகுமிடத்து, அப்போது அத்தகைய மேன்முறையீடு தொடர்பில் 141 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத் திற்கு வழக்கொன்று பகரப்பட்டிருந்தாலன்றி செலுத் தப்படற்பாலதான ஏதேனும் தொகை, மேன்முறை யீடு தீர்க்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டிற்குள் அறவிடப்படுதல் வேண்டும்.".

**55.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத் திற்கான முதலாம் அட்ட வணையை மாற்றீடு செய்தல்.

## முதலாம் அட்டவணை (பிரிவு 32)

வருமானவரி வீதம் – எவரேனும் பெறுநர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், நிறைவேற்றுநர்கள் அல்லது ஒழிப்போர் தவிர்ந்த தனியாட்கள்.

### பாகம் I

பாகம் II இல் குறிப்பீடு செய்யப்பட்டவர்களைத் தவிர்ந்த வேறு ஆட்கள்

2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு

| | |
|---|---|
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் முதல் 100,000 ரூபாவுக்கு | 10 சதவீதம் |
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் அடுத்த 100,000 ரூபாவுக்கு | 15 சதவீதம் |
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் முதல் 100,000 ரூபாவுக்கு | 25 சதவீதம் |
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் மீதிக்கு | 35 சதவீதம் |

### பாகம் IA

2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு –

| | |
|---|---|
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் முதல் 180,000 ரூபாவுக்கு | 10 சதவீதம் |
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் அடுத்த 180,000 ரூபாவுக்கு | 20 சதவீதம் |
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் மீதிக்கு | 35 சதவீதம் |

## பாகம் 1 ஆ

2003 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு

| | |
|---|---|
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் முதல் 180,000 ரூபாவுக்கு | 10 சதவீதம் |
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் அடுத்த 180,000 ரூபாவுக்கு | 20 சதவீதம் |
| வரிவிதிக்கப்பாலதான வருமானத்தின் மீதிக்கு | 30 சதவீதம் |

## பாகம் II

| | |
|---|---|
| இலங்கைப் பிரசையொருவரல்லாதவரும் 73 ஆம் பிரிவின் (7) ஆம் பிரிவின் கீழும் 37(1) ஆம் மற்றும் 37(2) ஆம பிரிவின் கீழும் வதிவற்றவராகக் கருதப்படுபவருமான எவரேனும் தனியாளுக்கு | 15 சதவீதம் |

## பாகம் III

(அ) 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வைடூரியத்திலிருந்து கிடைக்கும் குறித்தசில இலாபங்களுக்கு ஏற்புடையனவான வருமானவரி வீதங்கள் —

2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு

| | |
|---|---|
| முதல் 500,000 ரூபாவுக்கு | இல்லை |
| அடுத்த 150,000 ரூபாவுக்கு | 5 சதவீதம் |
| அடுத்த 150,000 ரூபாவுக்கு | 10 சதவீதம் |
| மீதிக்கு | 15 சதவீதம் |

(ஆ) அத்தகைய தொழில்தருநரின் எல்லா ஊழியர்களுக்கும் ஒரே சீராக ஏற்புடைத்தானதல்லாத செயற்றிட்டமொன்றின் கீழ் செலுத்தப்பட்ட தான, 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகைக்கு ஏற்புடைத்தான வருமான வரி வீதம் —

பாகம் I.அ அல்லது பாகம் I.ஆ, என்பதன்படி உச்சவரம்பிற்கமைய 20 சதவீதம்.

பாகம் III.அ

32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஊழியத்திலிருந்தான குறித்தசில இலாபங்களுக்கு ஏற்புடையதான வருமானவரி வீதங்கள்.

2002 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு

| | |
|---|---|
| முதல் 1,000,000 ரூபாவுக்கு | இல்லை |
| அடுத்த 500,000 ரூபாவுக்கு | 5 சதவீதம் |
| அடுத்த 500,000 ரூபாவுக்கு | 10 சதவீதம் |
| மிகுதிக்கு | 15 சதவீதம் |

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.

56. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :—

"இரண்டாம் அட்டவணை

(பிரிவு 53 மற்றும் 70)

வருமானவரி வீதங்கள் — கம்பெனிகள்

பாகம் I

2002 ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு :

35 சதவீதம்

நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் பரஸ்பர நிதியம் உட்பட கம்பெனிக்கு

பாகம் Iஅ

2002 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு :

| | |
|---|---|
| கூறுநம்பிக்கைப்பொறுப்பு மற்றும் பரஸ்பர நிதியம் உட்பட, கம்பெனிக்கு, வரிவிதிக்கப் படற்பாலதான வருமானம் வரிமதிப்பீட்டாண் டிற்கு ரூபா 50,00,000 பணத்தொகையை விஞ்சாதவிடத்து | 20 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமான வரி மதிப்பீட்டாண்டிற்கு ரூபா 50,00,000 பணத் தொகையை விஞ்சாதவிடத்து | 35 சதவீதம் |

பாகம் Iஆ

பின்வரும் வீதங்கள் 2003, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களுக்கமைய ஏற்புடையனவாதல் வேண்டும்.".

| | |
|---|---|
| கம்பெனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானம் (அவ்வரிமதிப்பீட்டாண்டின் போது 300 அல்லது 300க்கு மேற்பட்ட உறுப்பினர்களையுடைய விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனி, முயற்சி மூலதனக் கம்பெனி, நம்பிக்கைப் பொறுப்புக் கூறு அல்லது பகிரங்க நிதியம் ஒன்றைத் தவிர,) அந்த வரிமதிப்பீட்டாண்டில் 5,000,000 ரூபாவை விஞ்சுகின்றவிடத்து. | 32. 5 சதவீதம் (மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு 2.5 சதவீத உதவுதொகை உட்பட) |
| வரிமதிப்பீட்டாண்டின்போது 300 அல்லது 300க்கு மேற்பட்ட உறுப்பினர்களையுடையதும் அவ்வரிமதிப்பீட்டாண்டில் 5,000,000 ரூபாவை விஞ்சிய வரிவிதிக்கற்பாலதான வருமானத்தையுடையதுமான விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று. | 30 சதவீதம் (மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு 2.5 சதவீத உதவுதொகை உட்பட) |

| | |
|---|---|
| அக்கம்பெனியின் வரிவிதிக்கத்தக்கதான வருமானம் அவ்வரிமதிப்பீட்டாண்டில் 5,000,000 ரூபாவை விஞ்சாதவிடத்து (நம்பிக்கைப் பொறுப்புக் கூறு அல்லது பரஸ்பர நிதியத்தை அல்லது முயற்சி மூலதனக் கம்பெனியொன்றைத் தவிர) | 20 சதவீதம் |
| முயற்சி மூலதனக் கம்பெனியொன்று | 20 சதவீதம |
| ஒரு கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம் குறித்துரைக்கப்பட்ட துறைகளின் கீழான இலாபங்கள் | 10 சதவீதம் |
| ஒரு கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம் குறித்துரைக்கப்படாத துறைகளின் கீழான இலாபங்கள் | 20 சதவீதம். |
| முயற்சி மூலதனக் கம்பெனியொன்று குறித்துரைக்கப்பட்ட துறைகளின் கீழான இலாபங்கள் ஒரு நம்பிக்கைப் பொறுப்புக் கூறு அல்லது பரஸ்பர நிதியம் | 10 சதவீதம் |
| ஒரு நம்பிக்கைப் பொறுப்புக் கூறு அல்லது பரஸ்பர நிதியம் | 20 சதவீதம். |

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்.

**57.** முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் 1 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் —

"1. பிரிபடா இந்துக் குடும்பங்கள்

| | |
|---|---|
| 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 35 சதவீதம் |
| 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 30 சதவீதம் |

(2) அதன் 2 ஆம் விடயத்தில் "நிறுவனங்கள்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "நிறுவனங்கள் (கூட்டிணைக்கப்பட்ட குழுமங்கள் உட்பட)" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :

(3) அதன் 3 ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :—

"3. (இறுதிவிருப்பாவணங்களின் கீழான நம்பிக்கைப் பொறுப்பாளர் தவிர்ந்த) நிறைவேற்றுநரும் (ஒழிப் போன் தவிர்ந்த) பெறுநரும்

| | |
|---|---|
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியின் முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 35 சதவீதம் |
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியின் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 30 சதவீதம்.". |

(4) அதன் 4 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் —

"4. (இறுதிவிருப்பாவணங்களின் கீழான நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் உட்பட) நம்பிக்கைப் பொறுப் பாளர்கள்

| | |
|---|---|
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 35 சதவீதம் |
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 30 சதவீதம்.". |

(5) அதன் 5 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :—

"5. பங்குடைமைகள்

| | |
|---|---|
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 35 சதவீதம் |

| | |
|---|---|
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 30 சதவீதம்.". |

(6) அதன் 9 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :—

"9. (இலங்கை அரசாங்கம், ஐக்கிய இராச்சிய அரசாங்கம் தவிர்ந்த) அரசாங்கங்கள்.

| | |
|---|---|
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 35 சதவீதம் |
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 30 சதவீதம்.". |

(7) அதன் 10 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :

"10. 1971 ஆம் ஆண்டின் 35 இலக்க வியாபாரப் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட வியாபாரப் பொறுப்பு முயற்சிகள்

| | |
|---|---|
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 35 சதவீதம் |
| 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 30 சதவீதம்.". |

(8) அதன் 13 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :—

"13. மேலே குறிப்பிடப்பட்டவர்களும் முதலாம் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிட்டு செய்யப் படுபவர்களைத் தவிர்ந்த) ஆட்கள்.

| | |
|---|---|
| 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 20 சதவீதம் |
| 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு | 30 சதவீதம்.". |

**58.** முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையை உடனடுத்துப் பின்னர் பின்வரும் அட்டவணை சேர்க்கப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் ஆறாம் அட்டவணையாகப் பயனுறுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு ஆறாம் அட்டவணையைச் சேர்த்தல்.

"ஆறாம் அட்டவணை

"முதலாம், இரண்டாம் அத்துடன் மூன்றாம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட வீதங்கள் எவ்வாறிருப்பினும் பின்வரும் வீதங்கள் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

| | | |
|---|---|---|
| 1. | அரசாங்கத்திற்கு, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றுக்கு உள்ளூரதிகார சபையொன்றுக்கு உரித்தாக்கப்பட்ட அதனால் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான நட்ட வட்டியின் மீதான வட்டியின் மொத்தத் தொகையின் மீது வருமான வரிவீதம் (பிரிவு 33) | 10 சதவீதம் |
| 2. | ஏதேனும் வங்கி வைப்பிலிருந்து பெறப்பட்ட வட்டியின் மொத்தத் தொகை மீது வருமான வரிவீதம் (பிரிவு 34) | 10 சதவீதம் |
| 3. | இலங்கைக்கு வெளியே ஒரு கம்பெனியால், பங்குடைமையால் அல்லது ஆட்களின் வேறு குழுமத்தால் வழங்கப்பட்ட கடன்கள் மீதான மொத்த வட்டியின் மீதான வருமான வரிவீதம் (பிரிவு 35) | 15 சதவீதம் |

| | | |
|---|---|---|
| 4. | இலங்கைக்கு வெளியே ஏதேனும் கம்பெனிக்கு பங்குடைமைக்கு அல்லது ஆட்களின் வேறு குழுமத்திற்குச் செலுத்தப்பட்டதாலானதான அரசுரிமைப்பணம் கட்டணத்தின் மீதான வருமானவரி வீதம் (பிரிவு 36) | 15 சதவீதம் |
| 5. | கரையிலுள்ள வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் கூறின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வருமான வரிவீதம் (பிரிவு 38) | 15 சதவீதம் |
| 6. | கம்பெனியொன்றல்லாதவரும் பிரிவு 186 மற்றும் பிரிவு 39 என்பவற்றில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு கமத்தொழில், உல்லாசப் பிரயாணத் துறையை ஊக்குவிப்பதில் அல்லது நிருமாண வேலையில் ஈடுபட்டிருப்பவருமான ஆளொருவரால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்பு முயற்சியொன்றிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீதான வருமான வரிவீதம் (பிரிவு 39) | முதலாம் அட்டவணை பாகம் 1 இன்படி, ஆனால் 15 சதவீத உச்ச வரம்பிற்கமைய |
| 7. | பிரிவு 186 மற்றும் பிரிவு 40 என்பவற்றில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு கமத்தொழில், உல்லாசப் பிரயாணத் துறையை ஊக்குவிப்பதில் அல்லது நிருமாண வேலையில் ஈடுபட்டுள்ள கம்பெனியொன்றால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீது வருமான வரி வீதம் (பிரிவு 40) | 15 சதவீதம் |

| | | |
|---|---|---|
| 8. | தனித்துவமான வீடமைப்பு வங்கிகளுக்கு ஏற்புடைத்தான வருமான வரிவீதம் (பிரிவு 40அ) | 20 சதவீதம் |
| 9. | பிரிவு 21அ அல்லது 21இ என்பதன்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட குறித்தசில கம்பெனிகளுக்கு அத்தகைய விலக்களிப்புக் காலப் பகுதியை (பிரிவு 40ஆ) உடனடுத்து வரும் இரண்டு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு ஏற்புடைத்தாகும் வருமானவரி வீதம் | 10 சதவீதம் |
| 10 | வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர், அத்தகைய விலக்களிப்பு, பிரிவு 21ஆ அல்லது 21ஈ (பிரிவு 40ஆ) என்பதன் கீழாயிருக்குமிடத்து குறித்தசில கம்பெனிகளுக்கு ஏற்புடைத்தான வருமான வரிவீதம் | 20 சதவீதம் |
| 11. | வரி விலக்களிப்பு முடிவுற்றதன் பின்னர், அத்தகைய விலக்களிப்பு பிரிவு 21அ, 21இ அல்லது 21உ என்பதன் கீழாயிருக்குமிடத்தும் அத்துடன் 10 சதவீதம் அல்லது 15 சத வீதம் ஏற்புடைத்தாகாதவிடத்தும் குறித்தசில கம்பெனிகளுக்கு ஏற்புடைத்தாகும் வருமான வரி வீதம் (பிரிவு 40ஆ) | 20 சதவீதம்.". |
| 12. | 40 ஆம் பிரிவிற்கிணங்க வரிவிதிக்கப்படற்பாலதான இலாபங்களினதும் வருமானங்களிலும் இருந்து செலுத்தப்பட்ட பங்கிலாபங்களுக்கும், இலங்கைக்கு வெளியே பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபங்களுக்கும் பிரிவு 48அ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு பங்கிலாபங்களுக்கும் ஏற்புடைத்தான வருமான வரிவீதம். (பிரிவு 41, பிரிவு 48அ அத்துடன் பிரிவு 48ஆ) | 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு 10 சதவீதம் |

| | | |
|---|---|---|
| 13. | கம்பெனியொன்றாக அல்லாதவரும் 2014 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்தத் தொடங்கியவருமான ஆளொருவரின் தகைமைபெற்ற ஏற்றுமதி இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது வருமான வரிவீதம் (பிரிவு 44) | முதலாம் அட்டவணையின் படி. ஆனால் 19 சதவீத உச்சவரம்பிற்கமை |
| 14. | 2014 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியை கொண்டுநடாத்தத் தொடங்கிய கம்பெனியொன்றின் தகைமை பெற்ற ஏற்றுமதி இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது வருமான வரி வீதம் (பிரிவு 45) | 15 சதவீதம் |
| 15. | (கம்பெனியொன்றல்லாத) 2015 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்தும் ஆளொருவரின் தகைமை பெற்ற ஏற்றுமதி இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது வருமானவரி வீதம் (பிரிவு 46) | முதலாம் அட்டவணையின் படி. ஆனால் 15 சதவீத உச்சவரம்பிற்கமைய |
| 16. | 2015 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்தும் கம்பெனியொன்றின் தகைமைபெற்ற ஏற்றுமதிகளினதும் வருமானத்தினதும் மீதான வருமான வரி வீதம் (பிரிவு 47) | 15 சதவீதம் |

| | | |
|---|---|---|
| 17. | தகைமை பெற்ற ஏற்றுமதி இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து செலுத்தப்பட்ட பங்கிலாபங்கிலா பங்கள் மீது வருமான வரி வீதம் (பிரிவு 48) | 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு 10 சதவீதம். |
| 18. | எவரேனும் ஆளின் அல்லது பங்குடைமையின் கருதப்பட்ட ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது வருமான வரி வீதம் (பிரிவு 49) | முதலாம் அட்டவணையின் படி ஆனால் தனியாளொருவருக்கு 15 சதவீத உச்சவரம்பிற்கும் கம்பெனியொன்றுக்கு 15 சதவீத உச்சவரம்பிற்கும் உட்பட. |
| 19. | ஏதேனும் வதிவுள்ள கம்பெனியால் அல்லது ஒரு பங்குடைமையால் இலங்கைக்கு வெளியே ஆற்றப்பட்ட சேவைகளிலிருந்து கிடைக்கும் இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது வருமானவரி வீதம் (பிரிவு 50) | முதலாவது அட்டவணையின் படி பங்காளர் ஒருவரின் விடயத்தில் 15 சதவீதம் ஆனால் 15 சதவீத உச்சவரம்பொன்றிற்கமைய. |
| 20. | தனியாள் ஒருவரால் அல்லது பங்குடைமையொன்றின் பங்காளர் ஒருவரால் வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிக்கப்பட்ட வேதனாதிகள் மற்றும் வருமானம் மீது வருமான வரி வீதம் | முதலாம் அட்டவணையின்படி. ஆனால் 15 சதவீத உச்சவரம்பிற்கமைய. |

59 (அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 21அ, 32 அத்துடன் 48அ என்பவற்றிற்கு இச்சட்டத்தின் முறையே 9, 13 அத்துடன் 32 என்னும் பிரிவுகளால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்குமாகவும் 2002 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று வலுவுக்கு வந்தனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

(ஆ) பந்தி (அ) என்பதில் குறித்துரைக்கப்பட்ட பிரிவுகளைத் தவிர, இச்சட்டத்தால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2003 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப் படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**60.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.